**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**

**<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>**

**OS.No: 124/2024** **நாள் 14.10.2025.**

**வாசா.1, திரு.சிவானந்தம்**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் தற்பொழுது தகவல் தொழில்நுட்ப வல்லுநராக மதுரையில் வேலை பார்க்கிறேன். நான் பி.ஈ படித்துள்ளேன். என் அப்பாவுக்கும் என் அம்மாவுக்கும் 1978 ம் ஆண்டு திருமணம் நடந்தது. என் உடன் பிறந்தவர்கள் மொத்தம் 5 பேர். அதில் முதலாவதாக பிறந்த சுரேஷ் என்பவர் சிறுவயதிலேயே இறந்துவிட்டார். என் அப்பா திருமணத்திற்கு முன்பே அரசு அலுவலகத்தில் தட்டச்சராக வேலை பார்த்தார். என் அம்மா இல்லத்தரசியாக இருந்தார். என் அப்பா 11.04.2007 ம் தேதி இறந்தார். என் அப்பாவும் அம்மாவும் சேர்ந்து தான் என்னையும் என் உடன் பிறந்தவர்களையும் படிக்க வைத்தார்கள். எனது அம்மா நான்கு பேர்களையும் பள்ளிக்கு அனுப்பும் வேலையையும் வீட்டுவேலையும் செய்துவந்தார் என்றால் எனது அப்பாவும் உடனிருந்து சேர்ந்து வேலையை செய்வார். என் அம்மா எந்த வேலைக்கும் செல்லவில்லை. வீட்டிலேயே இருந்து சேலை வியாபாரம் செய்துவந்தார். என் அம்மா வீட்டில் இருந்துசேலை வியாபாரம் செய்துவந்த விபரத்தை நான் தாக்கல் செய்த பிராதிலும், அ.வ.64/2022 வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.வ.எண்.64/2022 வழக்கில் 1 முதல் 5 சொத்துக்களை பொறுத்து பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.வ.எ.64/2022 ல் 1 வது அயிட்ட சொத்தை பொறுத்து என் தகப்பனார் 29.08.1991 கிரைய சொத்து என்றால் சரிதான்.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டி எதிர்வாதி தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 14th day of October 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,<br>
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,<br>
ஸ்ரீவில்லிபுத்தூர்.